2011 ஜனவரி 11]

விவாதம் கூடாது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அமைதியாக உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னது போல, நஷ்டம் ஏற்கெனவே 700 கோடி ரூபாயாக இருந்தது; இப்போது ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது. காரணம், செலவினம் அதிகம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னச்சாமி அடிக்கடி எழுந்து பேசுகின்றார். அதற்காகத்தான் உங்களுடைய தொழிலாளர்களே உங்களுக்கு நல்ல முறையில் ஆப்பு வைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

தரம் உயர்த்துதல்

***104895—திருமதி பி. பத்மாவதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அரசவனங்காடு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையினை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், பெரும்பண்ணையூர் ஆரம்ப சுகாதார நிலையமானது 30-4-2007 நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

அரசாணை எண் 142-இன்படி தரம் உயர்த்தப்பட்டு, கட்டடப் பணிகள் யாவும் முடிவடைந்து 23-4-2010 முதற்கொண்டு 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியிலுள்ள கொரடாச்சேரி ஒன்றியம், அரசவனங்காட்டில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தக் கேட்டிருந்தேன். நான் இந்தக் கேள்வியை சுமார் ஓராண்டுக் காலத்திற்கு முன்பு கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெரும்பண்ணையூரில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக கட்டடம் கட்டப்பட்டு அங்கே செயல்படுகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு. அரசவனங்காடு அருகில் இருந்தாலும்கூட, நன்னிலம் தொகுதியிலுள்ள பூந்தோட்டப் பகுதியில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து போகின்ற, அதிலும் குறிப்பாக, இரவு நேரங்களில் மிக அதிகமாகப் பெண்களுக்கு மகப்பேறு நடைபெறுகின்ற மருத்துவமனைகளாக பூந்தோட்டம் மருத்துவமனையும், பக்கத்திலிருக்கின்ற பேரளம் மருத்துவமனையும் இருக்கின்றன. எனவே, அவசியமாக அந்த மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையின்படி வட்டம், வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத வட்டங்களில், தகுதிவாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30

2011 ஜனவரி 11]

படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகப் படிப்படியாகத் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன. இதுவரையில் 30 படுக்கைகள் கொண்ட தரமுயர்த்தப்பட்ட 257 மருத்துவமனைகள் தமிழகத்தில் இருக்கின்றன. 2006-க்கு முன்னர் 130 மருத்துவமனைகளும், 2007-ல் 75 மருத்துவமனைகளும், 2008-ல் 50 மருத்துவமனைகளும் மற்றும் தனியார் உதவியுடன் 2 மருத்துவமனைகளும், ஆக மொத்தம் 257 மருத்துவமனைகள் இப்போது தரமுயர்த்தப்பட்டு மக்களுக்கு நல்ல சேவை செய்து கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு 40 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கு ஆணைகள் வழங்கப்படவிருக்கின்றன என்ற செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால் வருகின்ற ஆண்டுகளில் பரிசீலிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.*

திருமதி பி. பத்மாவதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று பூந்தோட்டம் மருத்துவமனை எல்லாவகையிலும் அமைச்சர் சொன்ன விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அந்தவகையில் பூந்தோட்டம் மருத்துவமனையைத் தரமுயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சிறப்பாகச் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கை வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

[2011 ஜனவரி 11

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையிலே, 30,000 ஜனத்தொகை அல்லது 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒன்று என்று அந்தக் காலத்திலே வரையறுக்கப்பட்டபடிதான் இன்றைக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், இன்றைய ஜனத்தொகையைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது ஜனத்தொகையின் அடிப்படையிலே அதைத் திருத்தியமைப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகின்றேன்.

மேலும், உள்ளாட்சித் துறையின்கீழ் சரிவர இயங்காமல் இருக்கக்கூடிய Union dispensary-களை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு அரசு திட்டம் தீட்டுவதாக அறிந்தேன். அது உண்மைதானா? அப்படியிருந்தால் அவற்றை மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் எடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் இரண்டும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசு 30,000 மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற விகிதத்தின் அடிப்படையில் இப்போது மருத்துவமனைகளுக்கு அனுமதியளித்துக் கொண்டிருக்கின்றது. அது துறையின் வாயிலாகப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல, உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. அவை குறைந்த அளவில் இருக்கின்ற காரணத்தால் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அவற்றை மாற்றுவது குறித்து இரண்டு துறைகளினுடைய அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்த பிறகு, இந்தத் துறைக்கு அனுமதியளித்தார்கள் என்றால், வருங்காலத்தில் அவற்றை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2011 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனமரத்துப்பட்டி தொகுதிக்குட்பட்ட மல்லூர் பேரூராட்சி தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் அமைந்துள்ளது. இந்தப் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ளது. இந்தச் சுகாதார நிலையத்திற்கு சுற்று வட்டார 10 கிராமங்களிலிருந்து பொதுமக்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நிலை இருக்கின்றது. இந்த மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு உறுப்பினருடைய கோரிக்கையையேற்று, காரிப்பட்டி என்ற கிராமத்தில் விதிமுறைகளுக்குட்பட்டு மருத்துவமனை தரமுயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது மீண்டும் என்னிடம் உறுப்பினர் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருந்தால் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும். இந்த ஆண்டு 40 மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினரின் கோரிக்கை வருகின்ற ஆண்டு பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-05

ஒட்டுமொத்தமாக கலைஞருடைய ஆட்சியில் கிட்டத்தட்ட இந்த 4½ ஆண்டுக் காலத்தில் 127 மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டதன் அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, 24 மணி நேரமும் செயலாற்றுகின்ற காரணத்தாலும், இப்போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவங்களின் எண்ணிக்கை கூடுதலாகும் வாய்ப்பு பெற்றிருக்கின்றது. அதன் அடிப்படையிலே, கடந்த 2006, அதாவது இந்த ஆட்சி வருவதற்கு முன்பாக 81,000 பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடந்துள்ளன.

இந்த ஆட்சிக் காலத்தில் இதுவரை 7,93,841 பிரசவங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடந்துள்ளன. காரணம், தரமான மருத்துவ சேவை இலவசமாக வழங்கப்படுவதுதான். அதேபோல தரமான கருவிகள் வழங்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், 24 மணி நேரமும் மருத்துவமனைகள் இயங்குகின்ற காரணத்தாலும், இத்தகைய கோரிக்கைகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தி, அனுமதி பெற்று விரைவில் கூடுதலாக மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா அதியமான்.

திருமதி லதா அதியமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத் தேர்தல் விரைவில் வரவிருக்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இதே கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், பதிய வைக்கின்றார்கள். நிதி ஒதுக்கீடு கிடைத்தால் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை ஒட்டுமொத்தமாக அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.